பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 26 ஞாயிற்றுக்கிழமை 12.12.2021 கதிர் 265

## யாழில் கஞ்சா சுருட்டுடன் இளைஞர் ஒருவர் கைது!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் நகரில் கஞ்சா சுருட்டுடன் இளைஞர் ஒருவர் விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து ☞2

# அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை இந்தியாவிடம் ஒருமித்துக் கோர ஒன்றுகூடிய தமிழ்க் கட்சிகள்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பங்கேற்கவில்லை



தமிழ் பேசும் மக்களுக்கான அர்த்த முள்ள அதிகாரப் பகிர்வை இலங்கை அரசிட மிருந்து பெற்றுக்கொடுப்பதற்காக இந்தியாவிடம் ஒருமித்துக் கோரிக்கைவிடுப்பதற்கு தமிழ் பேசும் கட்சிகள் இணக்கப்பாட்டை எட்டுவதற்காக இன்று கூடின. ☞2



## ஜனநாயக இடதுசாரி முன்னணியின் கலந்துரையாடல் இன்று யாழ். நகரில்

(இ.கலையமுதன்)

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் அரசியல் தலைவர்கள் பங்கேற்ற கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இன்று முற்பகல் 11 மணியளவில் யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் கட்சியின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர்கள், உறுப்பினர்கள் ஆகியோர் ☞2

## ஆணைக்குழுக்களின் முடிவுகளை ஆராயும் ஆணைக்குழு யாழ் நகரில்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.12

இலங்கையில் மனித உரிமைகள் விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதிகளால் நியமிக்கப்பட்ட முன்னைய ஆணைக்குழுக்கள் மற்றும் குழுக்கள் ஆகியவற்றின் கண்டுபிடிப்புக்கள், பரிந்துரைகளை மதிப்பீடு செய்தல் மற்றும் எதிர்கால நடவடிக்கைகளை எடுத்தல் தொடர்பாக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வு அதன் தவிசாளர் ஓய்வுபெற்ற நீதியரசர் ☞2



## 300 கிலோ எடையுடைய கடலாமையுடன் நாவாந்துறையைச் சேர்ந்த நபர் கைது!

(எஸ்.நிதர்ஷன்)

சுமார் 300 கிலோ கிராம் எடையுள்ள கடலாமையைப் பிடித்து வந்த ஒருவர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நாவாந்துறையைச் சேர்ந்த 39 வயதுடையவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரின் உடமையிலிருந்து கைப்பற்றப்பட்ட ஆமை உயிருடன் உள்ளதால் நீதிமன்றத்தின் அனுமதியுடன் குறிகாட்டுவான் கடலில் மீள விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சப் இன்ஸ்பெக்டர் மேனன் தலைமையிலான யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸாரால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

# ஓட்டோவைப் பந்தாடிய ரயில்

## மயிரிழையில் உயிர் தப்பினார் சாரதி



(வவுனியா நிருபர்)

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற ரயில், வவுனியாவில் ஓட்டோ ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது. இதன்போது ஓட்டோ சாரதி, ஓட்டோவிலிருந்து பாய்ந்தமையால் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.

இன்று காலை 10.45 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற கடுகதி ரயிலானது தாண்டிக்குளம் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்தபோது குறித்த பகுதியில் இருந்த பாதுகாப்பற்ற ரயில் கடவையைக் ☞2

## யாழ். மீனவர்கள் இருவர் மன்னார் கடலில் மாயம்!

### தேடுதல் நடவடிக்கையில் கடற்படையினர்

(ந.லோகதயாளன்)

மன்னார் கடலில் தொழிலில் ஈடுபட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு மீனவர்களைக் காணவில்லை என்று திணைக்களத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து சென்று மன்னாரில் தங்கு தொழிலில் ஈடுபடும் மூவர் தூண்டில் வலையில் ஈடுபட்டு வந்த நிலையில் இன்று காலையும் ஒரு படகில் மூவர் பயணித்துள்ளனர். இவ்வாறு சென்ற ☞2

## தொடர்ந்து வெடிக்கும் காஸ் அடுப்பு

நுவரெலியா மாவட்டம், கொட்டகலைப் பகுதியிலுள்ள வீடொன்றில் இன்று அதிகாலை எரிவாயு வெடிப்புச் சம்பவம் பதிவாகியுள்ளதுஎனத் திம்புள்ள பத்தனைப் பொலிஸார் தெரிவித்தனர். ☞2

# நாடாளுமன்றத்தில் பலமிருந்தாலும் மக்கள் முன் இந்த அரசு மண்கவ்வும்

## சஜித் திட்டவட்டம்



அரசு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வரவு - செலவுத் திட்டத்தை நிறைவேற்றியுள்ள போதிலும், நாடாளுமன்றத்துக்கு வெளியே அவ்வாறான ஆதரவு இல்லை என்றும், மக்கள் முன் இந்த அரசு தோற்கடிக்கப்படும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்துக்கு வெளியேயும் மூன்றில் இரண்டு இருக்கின்றது என்பதை நிரூபித்துக் காட்டுமாறும் அவர் சவால் விடுத்தார்.

நாட்டு வளங்களைப் பாதுகாக்க வந்த அரசு அமைச்சரவைக்கும் தெரிவிக்காமல் அனைத்து வளங்களையும் விற்பனை செய்கின்றது என்றும், அரசு விவசாய ☞2

## நாடாளுமன்றத்தில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சமூகத்தைசட்டியில்இருந்துஅடுப்புக்குள் தள்ளிவிட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவிசாவளையில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

## தொடர்ந்து .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொட்டகலை, டிரேட்டன் கே.ஓ.பிரிவில், பழைய வீடமைப்புத் திட்டத்தில் உள்ளஆசிரியைஒருவரின்வீட்டிலேயே இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆசிரியை தண்ணீர் சுட வைப்பதற்காக எரிவாயு அடுப்பை மூட்டியபோதே இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அடுப்பைப் பற்ற வைத்துள்ள ஆசிரியை, தண்ணீர் கேத்தலை அடுப்பில் வைத்துவிட்டுச் சென்றுள்ளார். இதன்போதே அடுப்பு வெடித்துச் சிதறியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் எவருக்கும் உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெடித்துச் சிதறிய எரிவாயு அடுப்பின் பகுதிகளையும்எரிவாயுசிலிண்டரையும் பகுப்பாய்வுத்திணைக்களத்துக்கு அனுப்புவதற்குநடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது.

## யாழ். மீனவர்கள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மூவரில் இருவரே காணமல்போயுள்ளனர்.

இயந்திர சீருக்காக ஒருவர் கடலில் இறங்கிய வேளை அவர் கடலில் அடித்துச் செல்லப்படுவதை அவதானித்த இரண்டாவது தொழிலாளி கடலில் இழுத்துச் செல்பவரைக் காப்பாற்றும் நோக்கில் குதித்தபோது இருவரும் கடலில் அடித்துச் செல்லப்பட்டனர்.

இவ்வாறு கடலில் அடித்துச் செல்லப்பட்ட இருவர் தொடர்பிலும் திணைக்களத்தின் ஊடாக கடற்படையினரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. காணாமல்போன மீனவர்களைக் கடற்படையினர் தற்போது தேடி வருகின்றனர்.

## ஆணைக்குழுக்களின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஏ.எச்.எம்.டி நவாஸ் தலைமையில் யாழ் மாவட்டச் செயலகத்தில் இன்று இடம்பெற்றது.

இந்த ஆணைக்குழு அமர்வு தொடர்பில் எந்தவொரு பகிரங்க அறிவித்தலும் முன்னர் வழங்கப்பட்டிருக்கவில்லை. அரசகட்சியின்ஆதரவாளர்களும்உறுப்பினர்களுமே அதிகமாக இன்று அதில் கலந்துகொண்டனர்.

சுமார் 40 பேர் அமர்வில் பங்கு கொண்டிருந்தனர்.

## ஜனநாயக .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கலந்துகொண்டனர்.

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தேசிய மாநாடு டிசெம்பர் 19ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் அதற்கு முன்னோடியாக, மாவட்ட ரீதியாக கட்சியை வலுவூட்டும் வகையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில் அக்கட்சியின் பிரதி செயலாளர் திலகஸ்ரீ, கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ராஜிபாஸ்கர், கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் டேவிட் நவரட்ணராஜ் ஆகியோர் கலந்துகொண்டு சமகால நிலைமைகள் தொடர்பாக கருத்து தெரிவித்தனர்.

## அர்த்தமுள்ள .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொழும்பு குளோபல் டவர்ஸ் தனியார் விடுதியில் முற்பகல் 10.30 மணிக்கு இந்த முக்கிய சந்திப்பு ஆரம்பமாகியது.

கூட்டத்தின் தீர்மானத்துக்கமைய இந்தியாவிடம் மேற்படி கோரிக்கையை முன்வைக்கும் எழுத்து மூலமான கடித வரைவு தயார் செய்யப்படவுள்ளது.

இன்றைய கூட்டம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் நடைபெற்றது. அத்துடன் இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட் ஆகியனவும் பங்கேற்றிருந்தன.

மேலும், மனோகணேசன்தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி, ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியனவும் கலந்துகொண்டன.

இந்தக் கூட்டத்தில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரனும் பங்கேற்றதோடு, சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ். மற்றும் ஸ்ரீகாந்தா தலைமையிலான தமிழ்த் தேசியக் கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பங்கேற்கவில்லை என்பதோடு ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, கடந்த நவம்பர் மாதம் 2ஆம் திகதி ஏழு தமிழ் பேசும் கட்சிகள் ஒருமித்த நிலைப்பாட்டில் திண்ணை தனியார் விடுதியில் சந்திப்பில் ஈடுபட்டன.

இதில் பங்கேற்குமாறு இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோதும் அக்கட்சி இறுதி நேரத்தில் குறித்த சந்திப்பை பிற்போடுமாறு கோரியிருந்தது.

அதேநேரம், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் யாழ்ப்பாணம் செல்வதற்கு ஏதுவான நிலையில் இருந்திருக்கவில்லை.

இந்நிலையில், குறித்த கூட்டத்தில் பங்கேற்ற மனோ கணேசன் மற்றும் ரவூப் ஹக்கீம் ஆகியோர் இலங்கை தமிழரசுக் கட்சியும் இவ்விதமான கூட்டத்தில் பங்கேற்றிருக்க வேண்டும் என்று வலியுறுத்தியதோடு பின்னர் கொழும்பில் திரும்பி சம்பந்தனையும் சந்தித்திருந்தனர்.

அந்தச் சந்திப்பில் சம்பந்தன் கொழும்பில் கூட்டத்தைக் கூட்டுமாறும் அதில் பங்கேற்பதற்கு தான் தயார் என்ற சமிக்ஞையை வெளிப்படுத்தியிருந்தார்.

இதன் தொடர்ச்சியாக, நேற்றுமுன்தினம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ), தர்மலிங்கம் சித்தார்த்தன் (புளொட்) ஆகியோர் கூட்டாக கூட்டமைப்பின் தலைவருக்கு எழுத்துமூலமான கோரிக்கையை முன்வைத்திருந்தனர்.

அதில், எமது மக்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்காக சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வே எமது உறுதியான நிலைப்பாடு என்பதை வலியுறுத்தும் அதேவேளை, அரசமைப்பில் ஏற்கனவே உள்ள 13 ஆவது திருத்தத்தை முற்று முழுதாக நடைமுறைப்படுத்தி அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை உறுதிசெய்துமாகாணசபைத்தேர்தலை விரைந்து நடத்த இலங்கை அரசை வலியுறுத்துவதற்கு இந்தியாவை ஒருமித்து தமிழ் பேசும் கட்சிகள் கோருதல் என்றசெயற்பாட்டைமுன்னெடுப்பதற்குத் தமிழினம் முகங்கொடுத்துள்ள இக்கட்டான அரசியல் சூழ்நிலையை கருத்தில் கொண்டு கூட்டத்தைத் தலைமை தாங்கி செவ்வனே வழிநடத்துவீர்கள் என்று நம்பிக்கை உரித்துடன் கோரி நிற்கின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தை ஏற்றுக்கொண்ட சம்பந்தன் இன்று நடைபெற்ற கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார்.

இதேவேளை, கூட்டத்தின் பின்னர் கருத்து வெளியிட்ட சி.வி. விக்னேஸ்வரன்,

தமிழர்களின் நிரந்தரத் தீர்வை பெற்றுக்கொள்ளும் வரையில் சட்ட புத்தகத்தில் இருக்கும் 13ஐ நடைமுறைப்படுத்துங்கள் என்பதே எமது கோரிக்கை என்று தெரிவித்தார்.

இதேவேளை, கூட்டத்தின் பின்னர் கருத்து வெளியிட்ட ரவூப் ஹக்கீம்,

ஜனாதிபதி செயலணி என்ற பெயரில் சிறுபான்மை பிரதிநிதித்துவத்தை கபளீகரம் செய்யும் செயற்பாட்டை முற்றாக முடிவுக்கு கொண்டுவர 13ஐ அமுல்படுத்த வேண்டியது அவசியம் என்று கூறினார்.

இதேவேளை, கூட்டத்தின் பின்னர் கருத்து வெளியிட்ட மனோ கணேசன்,

13ஐ நடைமுறைப்படுத்த அழுத்தம் கொடுக்க வேண்டிய பிரதான கடமைப்பாடு இந்தியாவுக்கு உண்டு எனத் தெரிவித்தார்.

இன்றைய கூட்டத்துக்கு தமிழரசுக் கட்சிக்கு அழைப்பு விடுக்கப்படவில்லையென அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.





## ஓட்டோவைப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடக்க முற்பட்ட ஓட்டோவுடன் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்து காரணமாக சுமார் 50 மீற்றர் தூரத்துக்கு ஓட்டோ இழுத்துச் செல்லப்பட்டுள்ளதுடன், அது முழுமையாகச் சேதமடைந்துள்ளது.

ஓட்டோவின் சாரதி விபத்தின்போது ஓட்டோவிலிருந்து பாய்ந்தமையால் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, குறித்த பாதுகாப்பற்ற ரயில் கடவையில் பல தடவைகள் விபத்துக்கள் ஏற்பட்டிருந்தமையும், உயிரிழப்புக்கள் இடம்பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (100)

## யாழில் கஞ்சா ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாழ். நகரில் குறித்த இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட இளைஞர் சுன்னாகம் பகுதியைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகின்றது.

காலைக்கதிர் வார இதழ்
Kalaikkathir

நானும் சொல்கிறேனே.....!

✓ காலைக்கதிர் வார இதழின் நானும் சொல்கிறேனே என்னும் இந்தப் பகுதியில் நாங்கள் தரும் விடயத் தலைப்பினூடாக உங்களது அனுபவங்களையும் எண்ணங்களையும் பகிர்ந்து கொள்ளலாம்.

✓ சுருக்கமாகவும் சுவையாகவும் எழுதப்படும் விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதோடு சிறப்புப் பரிசுகளுமுண்டு!



இந்த வாரத்துக்கான தலைப்பு
யாருக்கும் பொறுப்பில்லை!

உங்கள் எழுத்துக்களை எதிர்வரும் 15.12.2021 புதன்கிழமைக்கு முன்னர் பின்வரும் ஏதாவது ஒரு வழிமுறையினூடாக எமக்கு அனுப்பி வைக்கவும்

நானும் சொல்கிறேனே.....!
காலைக்கதிர் வாரஇதழ்
Address - No.551 A, Kasthuriyar Road, Jaffna
மின்னஞ்சல் - kalaikkathirweekly@gmail.com
Whatsapp & Viber - 076 443 8622
சமூகவலைத்தளங்கள் - kalaikkathir (காலைக்கதிர்)

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தனி வழிக்குத் தயாராகும் சு.க.!

'பழைய குருடி கதவைத் திறவடி' என்ற சிந்தனையை நோக்கி நகர முற்பட்டிருக்கின்றது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி.

இந்த நாடு சுதந்திரம் பெற்ற காலம் முதல் 2019 ஆம் ஆண்டு வரை – எழுபது ஆண்டுகளுக்கு மேல் – நாட்டை மாறிமாறி ஆட்சி செய்து வந்த பிரதான கட்சிகள் இரண்டு. ஒன்று ஐக்கிய தேசியக் கட்சி. மற்றது சிறிலங்கா சுதந்திரக் கட்சி. ஆனால், இப்போது நிலைமை மாறிவிட்டது. இரு கட்சிகளிலிருந்தும் பிரிந்து, புதிதாகப் புதிய பெயரில் உருவான தரப்புகள் பிரதானமானவையாக மாற, இக்கட்சிகள் பெரும்பாலும் அடிபட்டுப் போய்விட்டன.

ஐ.தே.கட்சியிலிருந்து ஐக்கிய மக்கள் சக்தி உருவாகி விட்டது. சு.க. தேய அதிலிருந்து ஊற்றெடுத்த சிறிலங்கா பொதுஜன பெரமுன ஸ்திரமாகிவிட்டது.

இதில் வேடிக்கை என்னவென்றால் சு.கவிலிருந்து பிரிந்து, பிளந்து, பொதுஜன பெரமுனவை ராஜபக்ஷக்கள் உருவாக்க, தமது அரசியல் சுயநலனுக்காக சு.கவினர் இன்னும் பொதுஜன பெரமுன கட்சியுடன் கூட்டு என்ற பெயரில் அதில் ஒட்டிக்கொண்டிருப்பதுதான்.

பொதுஜன பெரமுனக் கூட்டில் அக்கட்சியின் தலைமைக்கு – குறிப்பாக ராஜபக்ஷக்களுக்கு – 'சலாம்' வைக்கும் நிலையில் தாங்கள் தொடர்ந்து இருப்பது சு.கவினர் பலருக்குப் பிடிக்கவில்லை. அதனால் அரசியல் பயணத் துக்கு அவர்கள் புதுவழி தேடுகின்றார்கள்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி முன்னர் பிரதான ஆட்சி அதிகாரத் தரப்பாக இருந்தபோது இரண்டு கூட்டுக்களை வைத்திருந்தது. ஒன்று – ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற கூட்டு; மற்றையது – பொதுஜன முன்னணி. இந்த இரண்டுமே இன்று வரை பதிவு செய்யப்பட்ட அரசியல் கூட்டுகளாகவே தேர்தல் ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்டு வருகின்றன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மஹிந்த அமரவீர; பொதுஜன முன்னணியின் பொதுச் செயலாளர் லஸந்த அழகியவண்ண. இருவருமே இப்போதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எம்.பிக்களே. அக்கட்சியின் சார்பில் அதுவும் மொட்டுக் கட்சிக் கூட்டணியின் கூட்டணியில் அங்கம் வகிப்பவர்கள். அமைச்சர்களும் கூட.

ஆளும் கூட்டணியின் தலைமையினால் தாங்கள் நசுக்கப்படுகின்றனர் என்றும், மூன்றாம் தர முறையில் நடத்தப்படுகின்றனர் என்றும் கருதும் சு.கவினர் அதனால் தனிவழி போவதற்குத் தயாராகி வருகின்றனர் என்று கூறப்படுகின்றது. அதற்கான முன்னாயத்தமாக தம் கட்டுப்பாட்டில் இருக்கும் பழைய கூட்டுக் கட்டமைப்புகள் இரண்டையும் – ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியையும், பொதுஜன முன்னணியையும் – மீளவும் துடிப்புடன் செயற்படுத்தத் தயாராகின்றனர் என்று கூறப்படுகின்றது.

நடந்து முடிந்த வரவு – செலவுத் திட்ட வாக்கெடுப்பில் சு.கவினர் முழுமையாக ஆளுந்தரப்பை ஆதரித்து, ஒற்றுமைப்பட்டு நின்று, தமது உறுதிப்பாட்டை வெளிப்படுத்திய போதும், அது, ஆட்சித் தரப்பில் இப்போது வரை ஒட்டி நிற்பதால் விலக முடியாத செயற்பாடாக மேற்கொள்ளப்பட்ட ஒன்று எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

சந்தர்ப்பவாத அரசியல் செய்யும் சுதந்திரக் கட்சி சரியான வாய்ப்புக்கு – பொருத்தமான சந்தர்ப்பத்துக்கு – காத்திருக்கின்றது. அது கிடைக்கும் போது தன்னிடமுள்ள இரண்டு அரசியல் கூட்டுகளில் ஒன்றின் பெயரில் தனிவழி போவது குறித்து அது தீவிரமாகத் திட்டமிட்டுக் காய்களை நகர்த்துகின்றது எனக் கூறப்படுகின்றது.

தேவைப்பட்டால், பிரதான எதிர்க் கட்சியன ஐக்கிய மக்கள் சக்தியுடனும், மற்றைய பிரதான கட்சியான மக்கள் விடுதலை முன்னணியுடனும்(ஜே.வி.பியுடனும்) கூட அணிசேர்வதற்கான வாய்ப்புக்களை சு.க. புறம் ஒதுக்காது என அதன் முக்கிய பிரமுகர் ஒருவர் குறிப்பிட்டிருக்கின்றமை கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

## பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானுக்கு நாடாளுமன்றில் ஹக்கீம் நன்றிபாராட்டு



இலங்கையைச் சேர்ந்த ஒருவர் பாகிஸ்தானில் மனிதாபிமானமற்ற முறையில் மிலேச்சத்தனமாக கொலை செய்யப்பட்டமையையிட்டு அந்நாட்டு பிரதமர் இம்ரான் கான் துரிதமாக செயற்பட்டு, அந்தக் கொடூரச் செயலில் ஈடுபட்டோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை மேற்கொண்டிருக்கின்றமையையிட்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நாடாளுமன்றத்தில் அவருக்கு நன்றி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வரவு – செலவுத் திட்டத்தின் நீதியமைச்சின் மீதான குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு, உரையாற்றிய போதே அவர் அவ்வாறு நன்றி கூறினார்.

இலங்கையர் ஒருவர் அங்கு அவ்வாறு கும்பலொன்றால் மோசமான முறையில் படுகொலை செய்யப்பட்டமையையிட்டு அதிர்ச்சியும், கவலையும் அடைந்தேன் எனவும், அதையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களைப் பகிர்ந்து கொள்கிறேன் எனவும், பலத்த கண்டனத்தைப் பதிவு செய்தேன் எனவும் கூறிய அவர், அதனை மன்னிக்க முடியாத படுபாதகச் செயலென்றும் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான கொலையின் பாரதூரம் பற்றி விளக்கும் அல்குர்ஆன் திரு வசனமொன்றின் ஆங்கில மொழி பெயர்ப்பையும் அவர் சபையில் வாசித்துக் காட்டினார்.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் இலங்கைக்கு வந்த சந்தர்ப்பத்தில், முஸ்லிம்களின் ஜனஸாக்களை எரியூட்டுவதை நிறுத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியதையும் அவர் நினைவூட்டினார்.

பாகிஸ்தானுடன் இலங்கை சிறந்த நட்புறவைப் பேணி வருகிறது எனக் குறிப்பிட்ட முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம், கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபட்டுவரும் நாடுகளிலொன்றான இலங்கை ஓர் இக்கட்டான சூழ்நிலையில் ஏனைய நாடுகள் பாகிஸ்தானுக்கு வந்து கிரிக்கெட் போட்டியில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொண்ட நிலையிலும், இலங்கை வீரர்கள் அதில் பங்குபற்றியிருந்தபோது, பயங்கரவாதத் தாக்குதலுக்கு முகம் கொடுக்க நேர்ந்ததையும் கூறினார். இரு நாடுகளுக்குமிடையிலான நல்லுறவு தொடர்வதாகவும் அவர் கூறினார்.

இந்த விடயத்தில் உடனடியாகத் தலையிட்டு பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் மேற்கொண்ட நடவடிக்கை தொடர்பாக அஸ்கிரிய பீடத்தின் மகா நாயக்க தேரர் நன்றி தெரிவித்திருக்கின்றமை மன நிறைவை அளிப்ப தாகவும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் தெரிவித்தார்.

இவ்வாறான கீழ்த்தரமான மனிதாபிமானமற்ற செயல் இனிமேல் இடம்பெறுவதற்கு அறவே இடமளிக்கக்கூடாது எனவும் அவர் கூறினார்.

## மன்னார் மாவட்டத்தில் கடந்த 10 நாள்களில் 144 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம்

### பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் தகவல்




மன்னாரில் கடந்த 10 நாள்களில் 144 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் மன்னார் மாவட்டத்தில் இவ்வருடம் 3 ஆயிரத்து 60 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.விநோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட கொரோனா நிலைவரம் தொடர்பாக அவர் விடுத்துள்ள கொரோனா நிலைவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

மன்னாரில் கடந்த 10 நாள்களில் 144 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் மன்னார் மாவட்டத்தில் இந்த வருடம் 3 ஆயிரத்து 60 கொரோனா தொற்றாளர்களும், தற்போது வரை 3 ஆயிரத்து 77 கொரோனாத் தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும் கடந்த வியாழக்கிழமை இரவு 2 கொரோனா மரணங்கள் பதிவாகி உள்ளன. மன்னார் பள்ளிமுனையைச் சேர்ந்த 59 வயதுடைய பெண் ஒருவர் வீட்டில் மரணித்த நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனாத் தொற்று உள்ளமை தெரிய வந்துள்ளது.

இரண்டாவது நபர் மன்னார் உப்புக்குளம் பகுதியைச் சேர்ந்த 64 வயதுடைய பெண். மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், அவருக்கு ஏற்பட்ட நிமோனியா காய்ச்சல் காரணமாக உயிரிழந்தார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 31 ஆக அதிகரித்துள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பயணத்தடைகளை நீக்கியமை அரசின் திட்டமிடப்படாத முடிவு

### சுகாதார நிபுணர்கள் குழு தெரிவிப்பு

தென்னாபிரிக்கா உள்ளிட்ட ஆறு நாடுகளுக்கு விதிக்கப்பட்ட பயணத்தடையை நீக்கியமை திட்டமிடப்படாத தீர்மானம் என சுகாதார நிபுணர்கள் குழு தெரிவித்துள்ளது.

சரியான திட்டமிடல் இன்றி அரசாங்கம் இந்த முடிவை எடுத்துள்ளதாகவும் சுகாதார நிபுணர்கள் குழு குற்றம் சாட்டியுள்ளது. ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே சுகாதார தொழில் நிபுணர்கள் கல்வியகத்தின் தலைவர் வைத்தியர் ரவி குமுதேஷ் இதனைத் தெரிவித்துள்ளார். புதிய மாறுபாடு நாட்டுக்குள் வருவதைத் தடுக்க முடியாது என்ற அடிப்படையிலேயே அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது என அவர் குற்றம் சாட்டினார்.



# பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக் புறக்கணிப்பில் பிரிட்டன், கனடா

அடுத்த ஆண்டு பெய்ஜிங்கில் நடைபெறவிருக்கும் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை ராஜீய ரீதியில் புறக்கணிக்கும் நாடுகளின் பட்டியலில் பிரிட்டனும் கனடாவும் இணைந்துள்ளன.

சீனாவின் ஜின்ஜியாங் மாகாணத்தில் சிறுபான்மை உய்கர் இன முஸ்லிம்கள் துன்புறுத்தலுக்கு உள்படுத்தப்படுகின்றனர் எனக் கூறப்படும் விவகாரத்தில் அந்த நாட்டுக்கு தங்களது எதிர்ப்பைப் பதிவு செய்யும் வகையில், ஏற்கெனவே அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் பெய்ஜிங் ஒலிம்பிக்கை போட்டிகளை ராஜீய ரீதியில் புறக் கணிக்க முடிவு செய்துள்ளமை நினைவுகூரத்தக்கது.

இதுகுறித்து கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூறியதாவது:

சீனாவில் அந்த நாட்டு அரசு தொடர்ந்து மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருகிறது. இது கனடாவுக்கு மிகவும் கவலையளிக்கும் விவகாரம் ஆகும். அதனை சீன அரசுக்கு உணர்த்த வேண்டியது அவசியமாகியுள்ளது.

எனவே, பெய்ஜிங்கில் நடைபெறவிருக்கும் குளிர்கால ஒலிம்பிக்குக்கு எங்களது தூதுக் குழுவை அனுப்புவதில்லை என்று முடிவு செய்துள்ளோம் என்றார் அவர்.

முன்னதாக, உய்கர் விவகாரத்தில் சீனாவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் பெய்ஜிங் ஒலிம்பிக்கை ராஜீய ரீதியில் புறக்கணிக்கப்போகிறேன் என பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்ஸனும் அறிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக் நிகழ்ச்சிகளில் பிரிட்டனைச் சேர்ந்த அமைச்சர்கள் யாரும் கலந்துகொள்ள மாட்டார்ாகள். மேலும், இதுதொடர்பாக அந்த நாட்டுக்கு அதிகாரிகளும் அனுப்பப்பட மாட்டார்கள்.

அரசியல் ரீதியிலான எதிர்ப்புகளைத் தெரிவிக்க விளையாட்டுப் போட்டிகளைத் தூதரக ரீதியில் புறக்கணிப்பதில் தவறொன்றும் இல்லை. அது, பிரிட்டனின் கொள்கைகளுக்கு முரணானது இல்லை என்றார்.

இருந்தாலும், இந்தப் புறக்கணிப்பால் குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் தங்களது வீரர்கள் பங்கேற்பதில் எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்று கனடா ஒலிம்பிக் குழு தெரிவித்தது.

அதற்கு முன்னதாக, சீனாவில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் மற்றும் தங்கள் நாட்டிலிருந்து பொருள்கள் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதற்காக சீன அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து, பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டியை ராஜீய ரீதியில் புறக் கணிக்கப் போகிறேன் என ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மோரிஸன் அறிவித்தார்.

இதற்கிடையே, பெய்ஜிங் ஒலிம்பிக்கை ராஜீய ரீதியில் புறக்கணிப்பது குறித்து ஜப்பான் உள்ளிட்ட அமெரிக்காவின் மற்ற கூட்டணி நாடுகளும் பரிசீலித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பெய்ஜிங் மற்றும் அதன் புகார் பகுதிகளில் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் அடுத்த ஆண்டு பெப்ரவரி 2 முதல் 20 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கின்றன.

தங்கள் நாட்டில் நடைபெறவிருக்கும் குளிர்கால ஒலிம்பிக் போட்டிக்கு ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளிலிருந்து தூதுக் குழுவினா வந்தாலும், வராவிட்டாலும் தங்களுக்கு கவலையில்லை என்று சீனா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சீன வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் வாங் வென்பின் கூறியதாவது:

ஜின்ஜியாங் மாகாணத்தில் உய்கா இனத்தவர்களுக்கு எதிராக மனித உரிமை மீறல்கள் நடைபெறுவதாகக் கூறப்படுவது புனையப்பட்ட பொய்யாகும்.இந்த விவகாரத்தில் ஆஸ்திரேலிய தலைவர்கள் அரசியல் விளையாட்டு விளையாடுகின்றனர்.

ஒலிம்பிக் போட்டிக்கு அந்த நாட்டிலிருந்து தூதுக் குழுவினா வந்தாலும் கவலையில்லை, வராவிட்டாலும் கவலையில்லை என்றார் அவர்.

முன்னதாக, ஒலிம்பிக் போட்டியை தூதரக ரீதியில் புறக்கணிப்பதற்கான விலையை அமெரிக்கா கொடுக்க வேண்டியிருக்கும் என்று சீனா எச்சரிக்கை விடுத்தது.

# சீனா தனது விநியோகப் படகுகள் மீது சுட்டதாக பிலிப்பைன்ஸ் குற்றச்சாட்டு

சர்ச்சைக்குரிய தென் சீனக் கடலிலுள்ள அயுங்கின் ஷோலில், பிலிப்பைன்ஸ் இராணுவ வீரர்களுக்கு பொருள்களை விநியோகம் செய்த படகுகள் மீது, சீன கடலோர காவல்படை கப்பல்கள் தண்ணீர் பீரங்கிகளை வீசியதாக பிலிப்பைன்ஸ் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும், குறித்த சம்பவத்திற்கு அமைச்சகம் டுவீட் செய்தது.

மேலும் அதிர்ஷ்டவசமாக, யாரும் காயமடையவில்லை. ஆனால் எங்கள் படகுகள் அவற்றின் மறுவிநியோக பணியை நிறுத்த வேண்டியிருந்தது. சீனாவின் தூதர் HE Huang Xilian மற்றும் பெய்ஜிங்கில் உள்ள வெளியுறவு அமைச்சகம் ஆகியோருக்கு எங்கள் எதிர்ப்பை வலுவான வார்த்தைகளி



கண்டனம் தெரிவித்துள்ளது.

கடந்த16 நவம்பர் 2021 அன்று,அயுங்கின் ஷோலில் (இரண்டாம் தாமஸ் ரோல்) பிலிப்பைன்ஸ் இராணுவ வீரர்களுக்கு உணவுப் பொருள்களைக் கொண்டு செல்வதற்காக, மூன்று சீனக் கடலோரக் காவல்படை கப்பல்கள், இரண்டு பிலிப்பைன்ஸ் விநியோகப் படகுகளைத் தடுத்து, தண்ணீர் பீரங்கி ஊடாக தாக்கியது என பலவானிலுள்ள மேற்குக் கட்டளை தெரிவிக்கிறது என அமைச்சகம் னால் தெரியப்படுத்தியதாக அமைச்சகம் கூறியுள்ளது.

அயுங்கின் ஷோல் கலயான் தீவுக் குழுவின் ஒரு பகுதியாகும். இது பிலிப்பைன்ஸின் ஒருங்கிணைந்த பகுதியாகும். அத்துடன் பிலிப்பைன்ஸின் பிரத்தியேக பொருளாதார மண்டலம் மற்றும் பிலிப்பைன்ஸுக்கு இறையாண்மை, உரிமைகள் மற்றும் அதிகார வரம்பு உள்ளது என்று அமைச்சகம் கூறியது.

# புருண்டி சிறைச்சாலை தீ விபத்தில் சிக்கி 38 கைதிகள் சாவு

கிழக்கு மத்திய ஆப்பிரிக்க நாடான புருண்டியின் தலைநகர் கிடேகாவில் உள்ள பிரதான சிறைச்சாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி குறைந்தது 38 கைதிகள் உயிரிழந்தனர்.

இந்த விபத்தில் 60க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என நாட்டின் துணை ஜனாதிபதி ப்ரோஸ்பெர் பஸூம்பன்ஸா தெரிவித்தார்.

சிடேகா நகரிலுள்ள சிறைச்சாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை திடீரென தீவிபத்து ஏற்பட்டது. 400 பேர் மட்டுமே தங்கக் கூடிய இந்தச் சிறையில் அளவுக்கு அதிகமாக 1,500க்கும் மேற்பட்ட கைதிகள் அடைத்துவைக்கப்பட்டிருந்ததால் அதிக உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன என புருண்டி ஊடகங்கள் குற்றம் சாட்டியுள்ளன. எனினும் தீ விபத்துக்கான காரணம் என்ன? என்பது குறித்து புருண்டி துணை ஜனாதிபதி ப்ரோஸ்பெர் பஸூம் பன்ஸா கருத்து வெளியிடவில்லை.

கிடேகாவில் உள்ள பிரதான சிறைச்சாலையில் கடந்த ஓகஸ்ட் மாதமும் தீ விபத்து ஏற்பட்டது. எனினும் இதில் உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை. மின் கசிவு காரணமாக இந்த விபத்து ஏற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.



# போர்க்குற்றத்தில் ஈடுபட்ட இலங்கை இராணுவத்தினர் இந்தியா வரத் தடைவிதிக்க வேண்டும் என்கிறார் ராமதாஸ்



போர்க்குற்றத்தில் ஈடுபட்ட இலங்கை இராணுவத்தினர் இந்தியா வரத் தடைவிதிக்க வேண்டும் என இந்திய நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்திருக்கிறார்.

இலங்கையில் அப்பாவி ஈழத்தமிழர்கள் 19 பேரைப் படுகொலை செய்த வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டு, அதிபர் கோட்டாபயவால் மன்னிக்கப்பட்ட சிங்கள இராணுவ அதிகாரிகளான ஹெட்டியாராச்சி, சுனில் ரத்னாயகே ஆகியோர் அமெரிக்காவில் நுழைய அந்தநாட்டு அரசு தடை விதித்துள்ளது. இந்த நடவடிக்கை வரவேற்கத்தக்கது.

மனித உரிமைகளை மதிக்காதவர்கள், போர்க் குற்றங்களைச் செய்தவர்கள் உலக நாடுகளால் புறக்கணிக்கப்பட வேண்டும் என்பதுதான் பொது விதி. ஒரு நாடு மனித உரிமையை மதிக்கிறது; பாதிக்கப்பட்ட சமூகத்தின் பக்கம் நிற்கிறது என்பதற்கு அதுதான் அடையாளம். அதை அமெரிக்கா சரியாக செய்திருக்கிறது.

ஆனால், இலங்கையில் ஈழத்தமிழர்களைப் படுகொலை செய்த சிங்கள இராணுவ அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் இந்தியாவுக்கு விருந்தினர்களாக வந்து செல்கின்றனர். இது தடுக்கப்பட வேண்டும். இலங்கையில் போர்க்குற்றத்தில் ஈடுபட்ட அனைவரும் இந்தியாவில் நுழையத் தடைவிதிக்கப்பட வேண்டும், என்று தனது டுவிட்டர் பதிவில் அன்புமணி ராமதாஸ் குறிப்பிட்டுள்ளார்.

## பக்தர்கள் கூட்டம் தினமும் அதிகரிப்பதனால் சபரிமலையில் கூடுதல் தளர்வுகள் அறிவிப்பு




சபரிமலையில் பக்தர்கள் கூட்டம் அதிகரித்து வருவதைத் தொடர்ந்து ஐயப்ப பக்தர்களுக்கு கொரோனாக் கட்டுப்பாடுகளில் மேலதிகத் தளர்வுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.


பம்பையில் இருந்து நீலி மலை, அப்பாச்சி மேடு, மரக் கூட்டம் வழியுள்ள வனப்பாதை ஐயப்பன் பக்தர்களுக்காக திறக்கப்படும் என்றும், நீலி மலையிலும், அப்பாச்சி மேட்டிலும் ஐயப்ப பக்தர்களுக்கு தேவையான மருத்துவ வசதிகள் செய்யும் சிறப்பு முகாம் அமைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சபரிமலை சந்நிதானத்தில் ஐயப்ப பக்தர்கள் இரவில் தங்குவதற்கு அனுமதி அளிக்கப்படுமெனவும், இதற்காக சந்நிதானத்தில் 500 அறைகள் கொவிட் 19நோய்த்தடுப்புவிதிமுறைகளின் படிதயார்படுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பக்தர்கள் பம்பை ஆற்றில் குளிக்கவும், பலி தர்ப்பணம் செய்யவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனாலும் பம்பை ஆற்றின் நீர் வரத்திற்கு ஏற்ப பக்தர்கள் குளிப்பது, பலி தர்ப்பணம் செய்வது குறித்த விடயத்தில பத்தனம் திட்டா மாவட்ட நிர்வாகம் முடிவெடுக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரள முதல்வர் பினராயி விஜயன் தலைமையில் அமைச்சர்கள் மற்றும், ஆலய தேவஸ்தானநிர்வாகிகள் கலந்துகொண்ட ஆலோசனைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

## தி.மு.க. அரசு பா.ஜ.கவுக்கு ஆதரவாக செயல்படுகிறது நாம் தமிழர் ஒருங்கிணைப்பாளர் சீமான் குற்றச்சாட்டு



பா.ஜ.கவை எதிர்ப்பதாக கூறிக் கொள்ளும் தி.மு.க. அரசு, இந்திய மத்திய அரசின் புதிய கல்விக் கொள்கை, வீடு தேடி கல்வித் திட்டம் என பலவற்றை தொடர்ந்து ஆதரித்து வருவதாக நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் குற்றம் சாட்டியுள்ளார்.

20 ஆண்டுகளுக்கு மேல் சிறையில் இருக்கும் இஸ்லாமியர்களை விடுவிக்க வேண்டும் என்றும், ராஜீவ் கொலை வழக்கில் சிறையில் இருக்கும் ஏழு பேரை விடுதலை செய்ய வலியுறுத்தியும் இன்று மதியம் நாம் தமிழர் கட்சி சார்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது. இஸ்லாமியர்கள், முக்கிய நிர்வாகிகள் உட்பட 500 பேர் கலந்துகொண்டு தமிழக அரசுக்கு எதிராக முழக்கம் எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தின் பின்னர் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்து பேசிய சீமான், கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் அண்ணா பிறந்த நாளையொட்டி சிறையில் இருப்பவர்களை விடுதலை செய்ததில் ஒரு இஸ்லாமியர் கூட உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை. அ.தி.மு.க., தி.மு.க. இரண்டு கட்சியுமே தொடர்ந்து வாக்கு அரசியலுக்காக மட்டுமே பயன்படுத்துகின்றன. எதிர்க்கட்சியாக இருந்தபோது குரல் கொடுத்த தி.மு.க., ஆட்சிக்கு வந்த பின் கண்டுகொள்ளவில்லை. எனவே 20 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் இருக்கும் இஸ்லாமியர்களை விடுவிக்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ராஜீவ் கொலையில் சம்பந்தப்பட்டதாகக் கூறி சிறையில் வைக்கப்பட்டு இருக்கும் 7 பேரை விடுவிக்கவும் இந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை, என்று தெரிவித்தார்.

அதேபோல் மத்திய அரசை எதிர்ப்பதாகக் கூறும் தி.மு.க., ஆளுநர் சந்திப்புக்குப் பிறகு புதிய கல்விக் கொள்கையில் நல்ல விடயம் இருக்கிறது எனத் தெரிவிக்கிறது. வீடு தேடி கல்வித்திட்டம் என பல விடயங்களுக்கு ஆதரவு கொடுக்கிறது. எதிர்க்காலத்தில் கூட்டணிக்கான இணைப்புத் திட்டமோ இது, என சந்தேகம் வரும் அளவிற்கு அவர்கள் செயல்பாடுகள் இருக்கின்றன. இதைத்தான் முன்பே நான் குறிப்பிட்டேன் என்றும் அவர் கூறினார்.

## எட்டு மாதங்களுக்குப் பின்னர் கேரளாவில் 6 சதவீதமாக குறைந்த கொரோனாப் பாதிப்பு




இந்தியாவில் கொரோனாப் பாதிப்பு முதலில் கண்டறியப்பட்ட கேரளாவில், கொரோனாவின் முதல் அலையைக் காட்டிலும் இரண்டாவது அலைப் பரவலில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்ததாகத் தரவுகள் தெரிவித்திருந்தன. இதனைக் கட்டுப்படுத்த கேரள அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்தாலும் தினமும் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை பத்தாயிரத்திற்கும் அதிகமாகவே இருந்து வந்தது.

இதையடுத்து கேரள அரசு பொதுமக்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்தது. வெளிநாடுகளில் இருந்து வருவோருக்கு 7 நாள் கட்டாயத் தனிமை உள்ளிட்ட உத்தரவுகளையும் பிறப்பித்தது. அரசின் தொடர் நடவடிக்கை காரணமாக தற்போது கேரளாவில் கொரோனா பரவல் வீதம் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மாநிலம் முழுவதும் ஒரே நாளில் 66 ஆயிரத்து 788 மாதிரிகள் ஆய்வுசெய்யப்பட்டதில் மூவாயிரத்து 972 பேருக்கு மட்டுமே கொரோனாப் பாதிப்பு இருப்பது தெரியவந்தது. இது 5.94 சதவீதமாகும்.

கேரளாவில் இதற்கு முன்பு கடந்த ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதி கொரோனாப் பரவல் 5.78 சதவீதமாக இருந்தது. அதன்பின்பு உச்சத்துக்குச் சென்ற பரவல், 8 மாதங்களுக்குப் பின்னர் 5.94 சதவீதமாக குறைந்துள்ளது.

கேரளாவில் அதிகபட்சமாக திருவனந்தபுரம் மாவட்டத்தில் 690 பேருக்கு நோய் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது. குறைந்தபட்சமாக காசர்கோடு மாவட்டத்தில் 62 பேருக்கு மட்டுமே தொற்று ஏற்பட்டுள்ளதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன.

## அரசு அதிகாரிகளை ஒருமையில் பேசினால் நடவடிக்கை எடுக்கப்படுமென அமைச்சர் உறுதி

அரசு அதிகாரிகளை ஒருமையில் பேசினால் நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழக மின்சாரத்துறை அமைச்சர் செந்தில்பாலாஜி எச்சரித்துள்ளார்.

கோவை மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நலத்துறை சார்பில் 71 மாற்றுத் திறனாளிகள், தனியார் நிறுவனங்களில் பணிபுரிவதற்கான நியமன ஆணைகளை அமைச்சர் செந்தில் பாலாஜி வழங்கினார். பின்னர் ஊடகவியலாளர்களிடம் உரையாடிய அவர், அரசு மதுபானக் கடைகளைப் பொறுத்தவரை மக்களிடமிருந்து வந்த பல்வேறு புகார்களின் அடிப்படையில் 134 பணியாளர்கள் தற்போது வரை பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தார்.

கோவையில் பொலிஸ் அதிகாரியை எம்.எல்.ஏ. ஒருவர் ஒருமையில் பேசியதாக எழுந்த சர்ச்சை தொடர்பாக பதில் அளித்த அமைச்சர் செந்தில் பாலாஜி, அரசு அதிகாரிகளை ஒருமையில் பேசினால் அது யாராகவிருந்தாலும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்தார்.



# பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்கள் பகடைக்காய்களாகப் பயன்படுத்தல்

## மட்டக்களப்பு மாவட்ட பயிற்சி பட்டதாரி ஆசிரியர் சங்கத்தினர் கவலை




அண்மையில் இடம்பெற்ற அதிபர், ஆசிரியர்கள் சம்பள முரண்பாட்டின் போது பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்கள் பகடைக்காய்களாகப் பயன்படுத்தப்பட்டார்கள். இவ்வாறு தங்களின் சந்தர்ப்பத்திற்கு பட்டதாரிகளைப் பயன்படுத்திவிட்டு தற்போது அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனம் வழங்கப்படப் போகின்றது என்று சொல்வது எந்த விதத்தில் நியாயம் என மட்டக்களப்பு மாவட்ட பயிற்சி பட்டதாரி ஆசிரியர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

நேற்றைய தினம் மட்டு ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தார்கள்.

இவ்வூடக சந்திப்பில் மட்டக்களப்பு மாவட்ட பயிற்சி பட்டதாரி ஆசிரியர் சங்கத்தின் தலைவர் க.அனிர்தன் மற்றும் லோ.சுதர்சன், எஸ்.பிரசாந்தினி ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது அவர்கள் மேலும் தெரிவிக்கையில், பட்டதாரிகள் பயிலுனர் ஆசிரியர்களாக பாடசாலைகளிலே சுமார் ஒரு வருடத்தைத் தாண்டிய நிலையில் கடமையாற்றிக்கொண்டிருக்கின்றார்கள். தற்போது ஏமாற்றப்பட்ட நிலையில் இருக்கின்றோம்.

இருப்பினும் எமது நாட்டின் ஜனாதிபதிக்கு நாங்கள் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் நாடளாவிய ரீதியில் அறுபதாயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டன. அது மிகவும் சந்தோசமானதொரு விடயம். அதனடிப்படையில் பட்டதாரிகளுக்கு ஐந்து கட்டப் பயிற்சிகள் நடைபெற்றன. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக பயிற்சிகள் இடைநிறுத்தப்பட்டு அதன் பிற்பாடு பல பட்டதாரிகளின் விருப்பத்திற்கு இணங்க அவர்கள் பாடசாலைகளில் ஆசிரியர் பயிற்சிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள்.

நேர்முகத் தேர்வின் அடிப்படையில் ஆசிரியர் பயிற்சியில் ஈடுபடுகின்றவர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்படும் என்று சொல்லப்பட்டதற்கமைவாகவே பட்டதாரிகள் பல சிரமங்களுக்கு மத்தியிலும் ஆசிரியர் பயிற்சிகளைச் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

பயிற்சி ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்ற இருபதாயிரம் ரூபாக்குள் நாங்கள் எவ்வளவு சிரமங்களுக்குள் எமது குடும்ப நிலைமைகளைக் கொண்டு செல்கின்றோம் என்பது குறித்த அமைச்சுகளுக்குத் தெரியவில்லையா? நாடளாவிய ரீதியில் எவ்வளவோ நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தாலும், அவர்கள் எவ்வளவோ பிரச்சினைகள் பற்றிக் கதைத்தாலும் எமது பட்டதாரிப் பயிலுனர்களுடைய, குறிப்பாக ஆசிரியர் பயிற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற பட்டதாரிகளின் நிலை குறித்து நாடாளுமன்ற உறுப்பினரும் அபிவிருத்திக் குழு இணைத் தலைவருமான சி.சந்திரகாந்தன் அவர்கள் மாத்திரமே கதைத்துள்ளார். அவருக்கும் எமது நன்றிகள்.

இது தொடர்பில் நாங்கள் உயரதிகாரிகளுடன் கதைத்த போது ஆசிரியர் பிரமான சட்டக் கோவை எனும் தேசிய கொள்கை இருப்பதாகத் தெரிவித்தார்கள். நாங்களும் அதைத்தான் கூறுகின்றோம் கோவையின் பிரகாரம் பயிலுனர் ஆசிரியர்களாக இருக்கும் பட்டதாரிகளை நேர்முகத் தேர்வு வைத்து ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்யுங்கள் என்று.

எமது பட்டதாரிகள் பயிற்சி ஆசிரியர்களாக மிகவும் சிரமத்தின் மத்தியிலேயே கடமையாற்றி வருகின்றார்கள். அதற்கு ஒரே ஒரு காரணம் தான் இருக்கின்றது. இந்த ஆசிரியர் நியமனம் நிரந்தரமாக்கப்படும் என்பதாகும். அதற்காகக் தான் இத்தனை கஷ்டங்களையும் தாங்கி தங்கள் பயிற்சிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அண்மையில் அதிபர் ஆசிரியர்கள் சம்பள முரண் பாடு போய்க் கொண்டிருந் தது. இதன்போது பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்கள் பக டைக்காய் களா கப் பயன்படுத்தப்பட்டார்கள். அதிபர் ஆசிரியர் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட போது பட்டதாரி பயிலுனர் ஆசிரி யர்களே பகடைக் காய்களாகப் பயன்படுத்தப்பட்டார்கள். இவ்வாறு தங்களின் சந்தர்ப்பத்திற்கு பட்டதாரிகளைப் பயன்படுத்திவிட்டு தற்போது அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனம் வழங்கப்படப் போகின்றது என எமது நியமனத்திற்குப் பொறுப்பான அமைச்சு கூறியிருக்கின்றது.

இதையும் தாண்டி இன்னுமொரு விடயத்தையும் கூறியிருக்கின்றார்கள் 2017, 18, 19களில் பட்டம் முடித்து தற்போது அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக இருக்கின்றவர்களையும் எதிர்வரும் இரண்டாம் மாதத்தில் வழங்கப்படப் போகின்ற ஆசிரியர் நியமனங்களுக்கு உள்ளீர்ப்பு செய்கிறோம் எனவும் கூறியிருக்கின்றார்கள்.

நாங்கள் சுமார் ஒரு வருடத்திற்கும் மேலாக ஆசிரியர் பயிற்சிகளில் ஈடுபட்டு நிரந்த ஆசிரியர் ஒருவர் எவ்வாறான வேலைகளைச் செய்வாரோ அதே அளவிலான செயற்பாடுகளை மேற்கொண்டு மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளை மேம்படுத்த கஷ்டங்களைத் தாண்டி செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம். ஆனால் 2017,18,19 பட்டம் பெற்றவர்கள் ஆசிரியர் பயிற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றார்களா? அவர்களை இந்த நியமனத்திற்குள் உள்வாங்க வேண்டியதன் காரணம் என்ன?

எனவே மேற்படி விடயங்களைக் கருத்திற்கொண்டு தற்போது பயிற்சி ஆசிரியர்களாக கடமை புரியும் பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் என்ற அடிப்படையில் நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் என நாங்கள் கல்வி அமைச்சரை விநயமாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

இந்த நாட்டின் நியமனம் வழங்குகின்ற முறையில் பெரும் முரண்பாடு காணப்படுகின்றது.

உயர்தரம், சதாரண தரத்துடன் நியமனங்கள் வழங்கப்படுகின்ற போது எவ்வித பயிற்சிகளும் வழங்கப்படுவதில்லை. ஆனால் பட்டதாரிகளின் நியமனங்கள் மாத்திரம ஒரு வருட பயிற்சிக்காகப் பணிக்கப்படுகின்றது. இது ஒரு வகையான முரண்பாடாகவே நாங்கள் கருதுகின்றோம்.

பயிற்சி என்பது யாது ஒரு தொழில் சம்பந்தான அறிவையும், அனுபவத்தையும் முன்கூட்டியே பெறுவது. அந்தவகையில் அபிவிருத்தி உத்தியோகத்தர் என்ற நியமனத்திற்காக நாங்கள் பாடசாலைகளில் பயிற்சி பெறவேண்டிய தேவை இல்லை. அவ்வாறெனில் இது வரை காலமும் நாங்கள் பெற்ற பயிற்சி வீணாகவே பார்க்கப்படுகின்றது.

எனவே அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் கவனம் எடுத்து எங்களுக்காக வழங்கப்படுகின்ற நிரந்தர நியமனத்தை ஆசிரியர் நியமனமாகப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுத்துத் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

எங்களை பாடசாலைகளில் பயிற்சிக்காக இணைக்கும் போது வயதெல்லை குறித்துப் பேசப்படவில்லை. ஆனால் தற்போது நிரந்தர நியமனம் என்று வரும்போது மாத்திரம் 35 வயது என்ற வயதெல்லை தொடர்பில் முரண்பட்ட கருத்துகளை சமூக வலைதளங்கள் மூலம் அறிந்தோம் இது குறித்து நாங்கள் மிகவும் அதிருப்தி அடைந்துள்ளோம். இதற்கு முன்னர் தொண்டர் ஆசிரியர் என்ற அடிப்படையில் வழங்கப்பட்ட நியமனத்தின் போது எதுவித வயதெல்லைகளும் இடப்படவில்லை. அவர்கள் கற்றல் அனுபவத்தினைப் பெற்றார்கள் என்ற ரீதியி லேயே அவர்களுக்கு அந்த நியமனம் வழங்கப்பட்டது. அதே போன்று நாங்கள் கடந்த பதினைந்து மாதங்களாக கற்பித் தல் செயற்பாடுகளை மேற்கொண்டு வரு கின்றோம். இதனைக் கவனத்திற் கொண்டு எமது நிரந்தர நியமனத்தினைத் தந்தால் சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்தனர்.

# குடி தண்ணீர் வசதிகளின்றி சிரமப்படும் ஹிஜ்ரா நகர் கிராம மக்கள்



ஓட்டமாவடி பிரதேச சபை பிரிவிலும் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவிலும் மட்டக்களப்பு கொழும்பு பிரதான வீதியை அன்டியதாக உள்ள ஹிஜ்ரா நகர் கிராமத்தில் 300 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் தங்களுக்கான குடிதண்ணீர் வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக மிகவும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இவர்களுக்கு அரசாங்கத்தினாலும் தொண்டு நிறுவனங்களினாலும் ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டிருந்தாலும் அதனுடாகவும் தங்களது தேவைக்கான நீர் இல்லாமல் மிகவும் சிரமப்படுகின்றனர்.

இவர்களின் குடிதண்ணீர் பிரச்சினையை ஓரளவு தீர்க்கும் வகையில் ஒவ்வொரு வருடமும் கோறளைப்பற்று பிரதேச செயலகத்தினால் வாகனத்திற்கான டீசலுக்கான கொடுப்பனவு வழங்கப்பட்டு ஓட்டமாவடி பிரதேச சபையின் ஆளணி மற்றும் வாகனத்தின் ஊடாக பிரதேச சபை எல்லைக்குள் உள்ள தண்ணீர் தட்டுப்பாடாக உள்ள பிரதேசங்களுக்கு வாரத்திற்கு ஒரு முறை குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது.

அவ்வாறு வழங்கப்படும் நீரும் மழைக்காலம் ஆரம்பித்தால் வழங்குவது நிறுத்தி விடுகின்றார்கள் கிணறு இல்லாத நாங்கள் நீர் வழங்குவதனை நிறுத்தினால் நீருக்கு என்ன செய்வது என்று பாதிக்கப்பட்ட மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். மழை பெய்யும் போது மழை நீரை சேமித்து பாவித்து வந்தோம் இந்த வருடம் மழையும் குறைவு. அதனால் குடிப்பதற்குக்கூட நீர் இல்லாமல் நாங்கள் மிகவும் சிரமப்படுகின்றோம் என்று தெரிவிக்கின்றனர்.

மழை பெய்ய ஆரம்பித்ததுடன் எங்களுக்கான குடிதண்ணீர் வழங்குவதனை நிறுத்தி விட்டார்கள் முறையான மழை வீழ்ச்சியும் எங்களது பகுதியில் இல்லாததால் கிணறுகளிலும் நீர் வற்றிக் காணப்படுகின்றது.

நீருக்காக நாங்கள் மிகவும் கஷ்டப்படுகின்றோம் எங்களுக்கு நீர் தொடர்ந்து கிடைப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

ஹிஜ்ராநகர் மக்களின் குடிதண்ணீர் விநியோகம் நிறுத்தப்பட்டது தொடர்பாக ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபரிடம் வினவியபோது–

பிரதேச சபையினால் எங்களது பிரதேச எல்லைகளில் உள்ள வறட்சியான கிராமங்களுக்கு கோடைக் காலத்தில் பிரதேச செயலகத்தினால் வாகனத்திற்கான போக்குவரத்திற்காக வழங்கப்படும் டீசலுக்கான கொடுப்பனவு வழங்கப்பட்டு ஓட்டமாவடி பிரதேச சபையின் ஆளணி மற்றும் வாகனத்தின் ஊடாக குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருவது வழக்கம் தற்போது மழை பெய்ய ஆரம்பித்ததும் பிரதேச செயலகங்களினால் வழங்கப்படும் டீசலுக்கான கொடுப்பனவு நிறுத்தப்பட்டதாக எங்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டதையடுத்து அவர்களுக்கான குடி நீர் வழங்குவதனை நிறுத்தியுள்ளோம். இருந்தும் குறித்த பகுதிகளில் தொண்டு நிறுவனங்களுக்கூடாக சில இடங்களில் ஆழ்துளை கிணறுகளை அமைத்து வருகின்றோம். எதிர்காலத்தில் தேசிய நீர் வடிகாலமைப்பு சபையின் குடிதண்ணீர் திட்டமும் அப் பகுதியில் வழங்குவதற்கான நட்டவடிக்கைகளை பிரதேசபை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

# பரபரப்பான எல்.பி.எல். போட்டியில் தம்புள்ள ஒரேயொரு ஓட்டத்தால் வெற்றி!



லங்கா பிறீமியர் லீக் தொடரின் 11 ஆவது போட்டியில் தம்புள்ள ஜயண்ட்ஸ் அணி கொழும்பு ஸ்டார்ஸ் அணியை ஒரேயொரு ஓட்டத்தினால் வெற்றிபெற்றுள்ளது.

நேற்று இரவு இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தம்புள்ள ஜயண்ட்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 138 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. நிரோஷன் டிக்வெல்ல 30 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார், கொழும்பு ஸ்டார்ஸ் அணி சார்பாக வண்டர்சே மற்றும் ராம்போல் இருவரும் தலா 3 விக்கெட்டுக்களையும், சீக்குகே பிரசன்ன 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதனை அடுத்து துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கொழும்பு ஸ்டார்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 137 ஓட்டங்களை மாத்திரமே பெற்று ஒரேயொரு ஓட்டத்தினால் தோல்வியடைந்தது. தினேஷ் சந்திமால் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்து 60 ஓட்டங்களையும், தனஞ்சய டி சில்வா 33 ஓட்டங்களையும் பெற்றனர். இறுதிப் பந்தில் வெற்றிக்கு 6 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் சந்திமாலினால் 4 ஓட்டங்களையே அடிக்கமுடிந்திருந்தது.

தம்புள்ள ஜயன்ட்ஸ் அணியின் தரிந்து ரத்நாயக்க 3 விக்கெட்டுக்களையும், இம்ரான் தாஹிர் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக தரிந்து ரத்னாயக்க தெரிவானார்.

# பாகிஸ்தான் சென்றுள்ள மே.இ.தீவுகள் அணி வீரர்கள் மூவருக்கு கொரோனாத் தொற்று!





மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணி மூன்று ரி-20 மற்றும் மூன்று ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுவதற்காக பாகிஸ்தான் சென்றுள்ளது.

ரி-20 கிரிக்கெட் தொடர் நாளை கராச்சியில் தொடங்கவிருக்கிறது. கடந்த வியாழக் கிழமை பாகிஸ்தான் சென்றடைந்த மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்கள், அலுவலர்கள் என அனைவருக்கும் கொரோனாப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதில், பயிற்சியாளர்கள் குழுவில் உள்ள ஒருவருக்கும் ரொஸ்டன் சேஸ், ஷெல்டன் கொட்ரெல், கைல் மேயர்ஸ் ஆகிய மூன்று வீரர்களுக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அனைவரும் இரண்டு டோஸ் தடுப்பூசிகளைச் செலுத்திக் கொண்டவர்கள் எனவும், அவர்களிடம் வெளித்தெரியும் அறிகுறிகள் ஏதும் காணப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஹோட்டல் அறையில் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும், ரி-20 தொடரில் அவர்கள் பங் கேற்க வாய்ப்பில்லை எனவும் மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

# 400 விக்கெட்டுக்களை வீழ்த்திய நதன் லையொன் ஆஸ்திரேலியாவின் மூன்றாவது பந்துவீச்சாளர்




ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் சுழற்பந்துவீச்சாளரான நதன் லையொன், டெஸ்ட் கிரிக்கெட்டில் தனது 400 ஆவது விக்கெட்டைக் கைப்பற்றியுள்ளார்.

இங்கிலாந்துடனான ஆஷஷ் தொடரின் முதலாவது போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் அவர் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார். அதில் முதலாவது விக்கெட்டான டேவிட் மாலனை வீழ்த்தியதன் மூலம் 400 என்கிற மைல்கல்லை அவர் எட்டினார்.

34 வயதான நதன் லையொன் 101 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 403 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார். இன்னிங்ஸ் ஒன்றில் 50 ஓட்டங்களைக் கொடுத்து 8 விக்கெட்டுக்களை வீழ்த்தியது அவரது சிறந்த பந்துவீச்சுப் பெறுதியாகும்.

போட்டியொன்றில் 5 அல்லது அதற்கு மேற்பட்ட விக்கெட்டுக்களை 18 தடவைகளும், 10 விக்கெட்டுக்களை 3 தடவைகளும் அவர் கைப்பற்றியிருக்கிறார். ஷேன் வோர்ன், க்ளெய்ன் மக்ராத் ஆகியோருக்கு அடுத்தபடியாக 400 விக்கெட்டுக்களை எடுத்த மூன்றாவது ஆஸ்திரேலிய வீரர் என்ற பெருமையை லையொன் பெற்றிருக்கிறார். சர்வதேச அளவில் 400 டெஸ்ட் விக்கெட்டுக்களை எட்டிய 16 ஆவது வீரர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

Personal English Classes
K.Ganesh (BA.Pera)
Grade 10, GCE O/L
Literature 2022, 2023
Grade 7 - GCE O/L, A/L,
பட்டதாரிகள், தொழில்புரிவோர்
Spoken Grammar
கற்கமுடியும்.

077 766 8725
நீராவியடி, யாழ்நகர்.



# கண்டி வொரியர்ஸ் அணி 5 விக்கெட்டால் வெற்றி

லங்கா பிரீமியர் லீக் தொடரில் நேற்று நடைபெற்ற இரண்டு போட்டிகளில் முதலாவது போட்டியில் கோல் கிளாடியேட்டர்ஸ், கண்டி வொரியர்ஸ் அணிகள் மோதியிருந்தன.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற கோல் கிளாடியேட்டர்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடி, 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 127 ஓட்டங்களைச் சேர்த்தது. குசல் மென் டிஸ் 44, சமித் பட்டேல் 36 ஓட்டங்களை எடுத்தனர். கண்டி வரியர்ஸ் அணியின் கமிந்து மென்டிஸ் 3 விக்கெட்களையும், சிராஸ் அகமட், நிமேஷ் விமுக்தி இருவரும் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

அடுத்துத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கண்டி வொரியர்ஸ் அணி, 18.4 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மட்டுமிழந்து வெற்றியிலக்கையடைந்தது. ரவி போபரா ஆட்டமிழக்காது 34 ஓட்டங்களையும், டொம் மூர்ஸ் 28 ஓட்டங்களையும் எடுத்தனர். கோல் கிளாடியேட்டர்சின் சமித் படேல் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இந்தப் போட்டியின் நாயகனாக கண்டி அணியின் ரவி போபரா தெரிவானார்.

# அரசியல் பழிவாங்கல்களில் நான் ஈடுபடுபவன் அல்லன்!

## என்கிறார் ஜீவன் தொண்டமான்



நான் அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபடுகின்றமை கிடையாது. அரசியலைவிடவும் சிறந்த நிர்வாகத்தையே செய்ய விரும்புகின்றேன் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கொட்டகலையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

எதையும் செய்யவில்லை என சிலர் விமர்சனங்களை முன்வைக்கின்றனர். புதுமையாக நான் எதையாவது செய்வதாக இருந்தால் அரசியல் பழிவாங்கலில் தான் ஈடுபட்டிருக்க வேண்டும். அதை நான் செய்யவில்லை. குறைவாக முழுமைபெறாத நிலையில் இருந்த திட்டங்களை முழுமைப்படுத்துவதில் தீவிரம் காட்டினேன்.

நான் அமைச்சுப் பதவியை ஏற்கும்போது அந்த அமைச்சு 230 கோடி ரூபா கடன் சுமையில் இருந் தது. நல்லாட்சியின்போது 4 ஆயிரம் இந்திய வீட்டுத்திட்டத்தில் 699 வீடுகள்தான் மக்களிடம் கையளிக்கப்பட்டிருந்தன. நான் அமைச்சுப் பதவியை ஏற்ற பின்னர் ஆயிரத்துக்கு மேற்பட்ட வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளன. எஞ்சியவை இந்த மாதத்துக்குள் கையளிக்கப்படும்.

அவர்களால் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களை நிறுத்தியிருக்க முடியும். அதனை நாம் செய்யவில்லை. எனது அமைச்சின் புதிய வேலைத்திட்டங்கள் அடுத்த வருடம் முதல் ஆரம்பமாகும்.

அதேவேளை, கூட்டு ஒப்பந்தம் மூலம் நாம் தொழிலாளர்களைப் பாதுகாத்தோம். ஆனால் அது தொடர்பில் போலி பரப்புரைகளை முன்னெடுத்து எம்மையும் தொழிலாளர்களையும் தூரப்படுத்த முற்பட்டனர். அன்று கூட்டு ஒப்பந்தத்துக்கு எதிராகச் செயற்பட்ட சங்கங்களும், அரசியல் கட்சிகளும் இன்று சந்தா பணத்துக்காக ஒப்பந்தம் வேண்டும் என்கின்றன. எனவே, சுயநல அரசியலை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கை சனத்தொகையில் 10 வீதமானோர் அரச சேவையில் உள்ளனர். கொரோனா நெருக்கடி நிலையால் இனி ஆள்சேர்ப்பு நடக்குமா எனத் தெரியவில்லை. எனவே, நாம் சுயதொழில் பற்றிக் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். சிலர் வேலைதேடியே காலத்தை வீணடிக்கின்றனர். சொந்த முயற்சி மீதும் நம்பிக்கை செலுத்த வேண்டும்.

நாம் அபிவிருத்திகளைச் செய்தாலும் திறப்புவிழா நடத்தி பிரசாரம் செய்யவில்லை. அரசியலைவிடவும் சிறந்த நிர்வாகத்தைதேய நான் விரும்புகின்றேன். – என்றார்.

# சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பு

சுற்றுலாப் பயணிகளின் வருகை இந்த வருடம் அதிகரித்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தில் மாத்திரம் ஒரு லட்சத்து 4 ஆயிரத்து 989 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

குறிப்பாக கடந்த நவம்பர் மாதம் 44 ஆயிரத்து 294 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொரோனாத் தொற்று பரவல் காரணமாக விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள் படிப்படியாகத் தளர்த்தப்பட்டதன் மூலம், நாட்டுக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதாக அந்த சபை தெரிவித்துள்ளது.

# 12 வயதுக்குட்பட்ட பயணிகளுக்கு பி.சி.ஆர். சோதனை அவசியமில்லை

## புதிய நடைமுறை அறிமுகம்

வெளிநாடுகளில் இருந்து நாட்டுக்கு வரும் 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை அவசியமில்லை என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், 12 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள் விமான நிலையத்தில் பி.சி.ஆர். சோதனை அறிக்கையை 72 மணிநேரத்துக்கு முன் சமர்ப்பிக்க வேண்டும்என அறிவித்துள்ளார்.

அத்தோடு விமானம் ஏறுவதற்கு 48 மணி நேரத்திற்கு முன் அன்டிஜன் பரிசோதனை செய்து, அவர்களுக்கு கொரோனாத்தொற்று இல்லைஎன்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

இதேநேரம், பயணிகள் கட்டாயம் ஒன்லைன் சுகாதார நடைமுறை தொடர்பான ஆவணங்களை பூரணப்படுத்தி சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அதனை உறுதி செய்யுமாறு சுகாதாரசேவைகள்பணிப்பாளர் நாயகம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

மேலும் அனைத்து விரைவான அன்டிஜன் சோதனை மற்றும் பி.சி.ஆர். அறிக்கைகள் ஆங்கிலத்தில் இருக்கவேண்டும் என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

இந்த நடைமுறைகள் அனைத்தும் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

# பணிப்புறக்கணிப்புக்குத் தயாராகின்றன அஞ்சல் திணைக்கள தொழிற்சங்கங்கள்

அஞ்சல் திணைக்களத்தின் அனைத்து தொழிற்சங்கங்களும், நாளை (திங்கட்கிழமை) முதல் 32 மணிநேர அடையாள பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளன. அஞ்சல் மற்றும் தொலைத் தொடர்பு உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர், சாந்த குமார மீகம இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். சேவையுடன் தொடர்புடைய தங்களது பிரச்சினைகள் உள்ளிட்ட, மேலும் சில கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படவுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை 13 ஆம் திகதி மாலை 4 மணி முதல், 14 ஆம் திகதி நள்ளிரவு வரை இந்த அடையாள பணிப்புறக்கணிப்பு தொடரும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவிற்கு உறுப்பினர்கள்

தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவிற்கான புதிய உறுப்பினர்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 12 (1) இன் விதிகளின் கீழ் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற நீதிபதி உபாலி அபேரத்ன தலைமையில் ஐந்து உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என ஜனாதிபதியின் பேச்சாளர் கிங்ஸ்லி ரத்நாயக்க உறுதிப்படுத்தியுள்ளார். ஜகத் பண்டார லியனாராச்சி, கிஷாலி பின்டோ ஜயவர்தன, ஓய்வுபெற்ற நீதிபதி ரோஹினி வல்கம, கலாநிதி அதுலசிறி குமார சமரகோன் ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.





கராத்தே கலையை திறம்பட மாணவர்களுக்கு பயிற்றுவிக்கும் ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று (12. 12. 2021) மல்வம் உடுவில் பகுதியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் உதயன் குழுமத் தலைவருமான ஈ. சரவணபவன்,இலங்கை கராத்தே சம்மேளன செயலாளர் பசநாயக்க மற்றும் கராத்தே சம்மேளன உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# நாடு எந்த நேரத்திலும் முடங்கலாம்? தீவிரமாக ஆராய்கிறது அரசாங்கம்?

பண்டிகைக் காலங்களில் நாடு முடக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகளுடன் அரசாங்கம் தீவிர ஆலோசனையில் ஈடுபட்டு வருவதாக ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு காலப்பகுதியில் நாட்டை முடக்காமல் பயணத்தடைகளை மாத்திரம் அமுல்படுத்தும் யோசனையை சுகாதாரப் பிரிவு முன்வைத்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

பண்டிகைக் காலங்களில் பொதுமக்கள் பொது இடங்களில் ஒன்றுகூடுவதைத் தவிர்க்கும் விதமாக இவ்வாறு பயணத்தடையை அல்லது முடக்கத்தை அமுல்படுத்துவதற்குத் தீர்மானம் மேற்கொள்ளப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டில் ஒமிக்ரோன் தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டார்.

இந்தநிலையில், இந்த வைரஸ் பரவலின் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவும் இந்த பொது முடக்கம் இருக்குமென கருதப்படுகிறது.

இதேவேளை, நாளொன்றுக்கு 700 இற்கும் அதிகமான கொரோனாத் தொற்றாளர்கள் பதிவாகி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.12.2021இல் வெளியிடப்பெற்றது.